## DEPOSITION OF WITNESS

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 75 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : பொன்னழகு | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : Ponram | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( A2 present, Others absent 317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.08.2023

**முதல் விசாரணை:**

1. நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் கருப்பசாமி எனது தம்பி ஆவார். சம்பவம் நடந்த அன்று நானும் எனது கணவரும் கன்னியம்பட்டியில் எனது அம்மா அசா.1ன் வீட்டில் இருந்தோம். கடந்த 10.10.2018ம் தேதி காலை எனது தம்பி கருப்பசாமி எனது கணவருடன் தோட்டத்தில் குளிக்க சென்றபோது எதிரி முத்துபாண்டி எனது தம்பியை கன்னத்தில் அறைந்தார். நாங்கள் அதனை கேள்விபட்டு தோட்டத்திற்கு பாதி துாரம் சென்று கொண்டிருந்த போதே எனது கணவர் எனது தம்பி வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். அப்போது காலை 09:00 மணியளவில் நாங்கள் வீட்டிற்கு வந்ததுமே எதிரிகள் முத்துபாண்டி, பிச்சைபாண்டி, முனியம்மாள், பாண்டீஸ்வரி, எதிரி முத்துபாண்டியின் அப்பா கருப்பையா ஆகியோர் வந்தார்கள், எதிரி பிச்சைபாண்டி கையில் உலக்கையும், எதிரி முத்துபாண்டி கம்புடனும், எதிரி பாண்டீஸ்வரி கையில் விலக்கமாறும் வைத்திருந்தார்கள்.

2. நாங்கள் வீட்டில் திருவிழா என்பதால் எல்லோருமே இருந்தோம். எதிரிகள் வந்ததும் எதிரி பிச்சைபாண்டி உலக்கையால் எனது தம்பி கருப்பசாமியின் தலையின் முன்நெற்றியில் அடித்துவிட்டார். அதில் அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டது. எதிரி பிச்சைபாண்டியிடம் இருந்து எதிரி முத்துபாண்டி உலக்கையை பிடுங்கி எனது அம்மா அசா.1ன் நெஞ்சில் அடித்துவிட்டார். எதிரி பாண்டீஸ்வரி

எனது தம்பி மனைவி சித்ரா அசா.2ஐ முடியை பிடித்து இழுத்து, விளக்கமாற்றால் அடித்துவிட்டார். நானும் எனது கணவரும் சண்டையை விலக்க முயன்றோம். எதிரி முத்துபாண்டி உலக்கையை காண்பித்து என்னைக்கிருந்தாலும் உனக்கு என் கையால் தான் சாவு, உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று எனது தம்பியை மிரட்டினார். ஆட்டோவில் எனது தம்பியை அழைத்துகொண்டு காவல் நிலையம் சென்று புகார்அளித்துவிட்டு அங்கிருந்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றோம். எனது தம்பி 3 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். எனது அம்மாவிற்கு நெஞ்சில் அடிபட்டதற்கு முதலுதவி சிகிச்சை எடுத்தார், போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** சம்பவ சமயத்தில் நாங்கள் உசிலம்பட்டியில் குடியிருந்தோம், ஆனால் சம்பவத்தன்று திருவிழாவிற்காக கன்னியம்பட்டிக்கு அங்கு சென்றிருந்தோம். சம்பவ சமயத்தில் எனது தம்பி ஒட்டன்சத்திரத்தில் குடியிருந்தார், சம்பவத்தன்று திருவிழாவிற்காக ஊருக்கு வந்திருந்தார். எதிரி பாண்டீஸ்வரியை எனது தம்பி வீட்டிற்குள் சென்று கையை பிடித்து இழுத்து தகாத முறையில் நடந்து கொண்டதாக ஊரில் பஞ்சாயத்து வைத்து எங்களுக்கு அது சம்பந்தமாக விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். ஆனால் அந்த சம்பவத்தை நேரில் யாரும் பார்க்கவில்லை, நடந்ததாக சொல்கிறார்கள் அவ்வளவு தான். எனது தம்பி தோட்டத்தில் நடந்த பிரச்சினைக்கு புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் அந்த பிரச்சினை நடந்து வீட்டிற்கு வரவும் எதிரிகள் அடித்துவிட்டார்கள். அசா.1 எனது அம்மா, அசா.2 எனது தம்பி மனைவி ஆவார். காவல் நிலையம் சென்றபோது போலீசார் எங்களை விசாரிக்கவில்லை, எனது தம்பியை விசாரித்தார்கள், நாங்கள் உடன் இருந்தோம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தம்பி ஊருக்குள் விடாததால் எதிரிகள் மீது எனது தம்பி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தம்பி மற்றும் அம்மாவிற்க்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் அவர்கள் எதிரிகளை தாக்க சென்றபோது கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயங்கள் என்று சொன்னால் சரியல்ல.

S.d./ Ponnalagu

Taken down be me in open court
Read over to the witness in the

presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.